RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt20419

OPEN ACCESS

# தமிழில் அற இலக்கியங்களின் தோற்றமும் பின்னணிகளும்

ப. வசந்தி [அ, *], வெ. பரிமளம் [அ]

[அ] தமிழ் இலக்கியத்துறை, என்.ஜி.எம்.கல்லூரி, பொள்ளாட்சி, தமிழ்நாடு இந்தியா

# The Origin and Backgrounds of Didactic Literature in Tamil

P. Vasanthi [a, *], V. Parimalam [a]

[a] Department of Tamil, N.G.M College, Pollachi, Tamil Nadu, India

* Corresponding Author: Vasanthiias95@gmail.com

Received : 03-07-2020
Accepted : 08-09-2020

Check for updates

**ABSTRACT**

Literature is a reflection of life. The noble ideals necessary for life are expressed in literature. From the Sangam period to the present, literary works have been created focusing on human life. The literature produced in this manner serves as a reflection of the society of that time and stands as a document of the cultural life of the people. The Sangam tradition divides human life into the internal and the external. They differentiate between individual life as the internal and the state in which a person lives and acts in connection with society as the external. In this way, Tamil literature that centers around ethics reflects on the social structure, the ethical life of Tamils that has embraced societal living, methods of conduct, and lofty values aimed at well-being. This article explores the emergence and backgrounds of such ethical literature.

**Keywords:** Literature, People, Social Structure, Sangam tradition

## முன்னுரை

சங்ககாலம் முதல் தற்காலம் வரையில் அறம் மானுட வாழ்வில் இன்றியமையாததாகப் போற்றப்படுகின்றது. தொட்டில் பருவத்திலிருந்தே அறம் தொடங்கிவிடுகின்றது. “கொடையும் தயையும் பிறவிக்குணம்” என்று ஔவையார் பிறப்பிலிருந்தே அறம் மலர்வதை சுட்டிக்காட்டுகின்றார்.

பண்புமிக்க செல்வர் வீட்டுக்குழந்தை புலவர் ஒருவற்கு தன் நடைவண்டியையே கொடைப் பொருளாக கொடுத்ததாம். உள்ளம் சிலிர்த்த அவர், “நடைக் கற்கும் முன்பே கொடை கற்றாயே” என்று பாடினாராம். பிறப்பு தொடங்கி வாழ்வின் முடிவுவரை மனித வாழ்வு அறத்தோடு இயங்கவேண்டுமென்பது தமிழ் இலக்கியங்களின் நுவல் பொருளாகும்.

## அறமும் சமூகமும்

தனிமனித வாழ்வில் அறம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததோ அந்த அளவிற்கு சமூகவாழ்விலும் அறம் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அறமற்ற சமூகம் என்றுமே நிலைத்திருக்காது. சமூகத்தின் சீரான இயக்கத்திற்கு அறமே அடிப்படை எனலாம். தனிமனித அறமும் சமூக அறமும் இணைந்துதான் ஒரு சமூகத்தை மேம்பட்ட

சமூகமாக மாற்றுகின்றது. சங்க காலத்திலிருந்து தற்காலம் வரையில் தமிழ்ச்சமூகத்தில் அறம்ஆற்றல்வாய்ந்த ஒன்றாக இருந்துவருகின்றது. அறத்தின் பரிணாம வளர்ச்சியே சமூகத்தின், மனித இனத்தின் பரிணாம வளர்ச்சியாகும். சங்ககாலத்தில் இருந்த புறத்திணை இலக்கியமரபு சங்கம் மருவிய காலத்தில் அற இலக்கிய மரபாக மாற்றம் பெறுவதற்கு சங்ககால சமூகத்தில் நிலவிய அரசியல் பொருளாதார பண்பாட்டு மாற்றங்களே காரணம் எனலாம்.

## சங்ககால சமூகநிலை

இனக்குழு மரபின் சிதைவு, அரசுருவாக்கச் சூழல், அதனடிப்படையில் உருவான புதிய பண்பாட்டு மாற்றங்கள், சமயங்களின் செல்வாக்கு போன்றவை சங்ககால சமூகத்தைப் பெரிதும் பாதிப்பதாக இருந்தன. சங்க காலப் புறவாழ்வு பெரிதும் தனிமனித, சமூக அறங்களின் சிதைவையே காட்டுகின்றன. இச்சிதைவைச் சரிசெய்யவே புலவர்கள் அறநெறிக் கோட்பாட்டை வளர்த்தெடுத்துள்ளனர். போர்கள் மலிந்து கிடந்த சங்ககால கட்டத்தில் புலவர்கள் மன்னர்களின் மனதில் நாட்டின் அமைதிக்கான சிந்தனைகளை தோற்றுவிப்பதில் முனைந்து செயல்பட்டுள்ளனர். அறத்தின் தேவையை சங்கச்சமூகம் உணரத்தொடங்கியிருப்பதை ஏராளமான பாடல்களில் காணமுடியும்.

## களப்பிரர், பல்லவ மன்னர்களின் ஆட்சி

தமிழகத்தில் களப்பிரர்களின் இடையீடு காரணமாக மூவேந்தர்களின் ஆட்சி கி.பி. 3-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு வீழ்ச்சியடையத் தொடங்கியது எனலாம். களப்பிரர்கள் வேற்றுமொழியினர் வேற்றுச் சமயத்தவர். இவர்கள் காலத்தில் புத்த வழிபாடும், பாலி, பிராகிருத மொழிச்செல்வாக்கும் மிகுந்தன. சங்க காலத்திலேயே பௌத்த, சமணக் கொள்கைகள் ஓரளவு தமிழகத்தில் தலைகாட்டியிருந்தன. ஆனாலும் நாட்டை ஆள்வோரே அவற்றை ஆதரித்து, வலிதில் புகுத்திய காலம் கி.பி. 4-ஆம் நூற்றாண்டு அளவில் தொடங்கியது எனலாம். பாண்டிய நாட்டையும், சோழ நாட்டையும் கைப்பற்றிய இக்களப்பிரர் பௌத்த சமயத்தைத் தென்னகத்தே பரப்ப முயன்றனர். அக்கால கட்டத்தில் பல்லவர்கள் என்ற பிற மொழியாளர் தொண்டை நாட்டையும், நடுநாட்டையும் கைப்பற்றி ஆளத் தலைப்பட்டனர். அவர்கள் சமண சமயத்தையும் வடமொழியையும் பாதுகாத்தனர். அவர்களுடைய செப்பேடுகள் முற்பகுதியில் பிராகிருத மொழியிலும், இடைப்பகுதியில் வடமொழியிலும், கி.பி.ஏழாம் நூற்றாண்டிலிருந்து வடமொழி, தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் உள்ளமையே அக்கால நிலையை உணர்த்தப் போதிய சான்றாகும்.

## வணிக வர்க்கம் தோன்றுதல்

சங்க கால இறுதியில் தோன்றிய வேந்தர்களின் ஆட்சி காலத்தில் வணிக வர்க்கமே முன்னிலை வர்க்கமாக சிறப்புற்று விளங்கியுள்ளது என்பதைச் சங்க நூல்களான பட்டினப்பாலையும் மதுரைக்காஞ்சியும் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி முதலிய பாட்டுக்களில் வணிகரைப் பற்றிய குறிப்புகள் முதன்முறையாக நீண்ட அளவில் காணப்படுகின்றன. வீரயுகத்தின் இறுதிக்காலத்தில் தமிழ்நாடு பிற நாடுகளுடனும் வணிகஞ் செய்யத் தொடங்கியது.

யவனரின் களங்கள் பொன்னைக் கொணர்ந்து மிளகை எடுத்துச் சென்றன. காவிரி பூம்பட்டினத்தை ”முட்டாச் சிறப்பின் பட்டினம்” என்று பட்டினப்பாலை வர்ணிக்கும்.(சாமிநாதையர்.,உ.வே.1956) அரசுக்கு இணையாக படை வைத்துக்கொள்ளும் அளவிற்கு உரிமையையும் முதன்மையையும் வணிகர்கள் பெற்றிருந்தனர்.

பொருளாதாரத் துறையில் வணிகர் முன்னேற்றம் பெற்றதன் காரணமாக சமூகத்திலும் அவர்களுடைய ஆதிக்கம் பெருமளவில் காணப்படுகின்றது. இக்கூற்றைச் சிலப்பதிகாரத்தை எடுத்துக்காட்டி உறுதி செய்கின்றார் பேராசிரியர் கைலாசபதி அவர்கள்.(கைலாசபதி.க.,(1966)

“பெருநில முழுதாளும் பெருமகன் தலைவைத்த

ஒருதனிக் குடிகளோ டுயர்ந்தோங்கு செல்வத்தான்“ (இளங்கோவடிகள்.,1872)

என்று மாசாத்துவனை வர்ணிக்கும் போதும்,

”முரசியம்பின முருடதிர்ந்தன முறைமொழிந்தன

பணிலம் வெண்குடை அரசெழுந்ததோர்படி யெழுந்தன” (இளங்கோவடிகள்.,1872)

என்று கோவலன் மணவினை அறிவித்தகாலை வெண்குடைகள் அரசன் உலா எழுந்தது போல எழுந்தன எனக் கூறும்போதும், இளங்கோ, மன்னர்க்கு சமமான இருநிதிக் கிழவரை உயர்த்திப் பாடுவதை நாம் கவனிக்கலாம். அதுமட்டுமன்றி, அரசர்க்குச் சமானமாகவன்றி அவர்க்கு மேலாகவும் வணிகரை உயர்த்தி விடுகின்றார் கவிஞர்‖ இவ்வாறு சங்ககாலத்தின் பிற்பகுதியிலும் சங்கம் மருவிய காலப்பகுதியிலும் வணிக வர்க்கத்தினர் முதன்மை பெற்றிருந்ததை அறியமுடிகின்றது.

## வடபுல மதங்களின் தாக்கம்

சங்க கால இறுதியில் தோன்றிய நூலான மதுரைக் காஞ்சி சமணம், பௌத்தம் ஆகிய வைதீகமற்ற சமயக் கொள்கைகளும் வைதீக சமயக் கொள்கைகளும் அருகருகே இருந்து மக்களை கவரந்ததைக் காட்டுகின்றது. ஆனால் இந்த மூன்று சமயங்களுக்குள் இருந்த போட்டியில் மக்களையும் ஆட்சியாளர்களையும் கவர்ந்த சமயங்களாக சமணமும் பௌத்தமுமே திகழ்ந்துள்ளன.

## சமணபௌத்த மதங்களின் எழுச்சி

மீன் பிடித்தல், வேட்டையாடுதல் போன்ற உயிர்க்கொலை செய்யும் தொழில்களைத் தவிர ஏனைய தொழில்களை எல்லாம் சமண பௌத்த சமயங்கள் சிறப்பித்துப் போற்றி வந்ததன. (மிகச் சிறந்த தொழிலாகிய பயிர்த்தொழிலை பிராமண மதம் எனப்படும் வைதீக மதம் இழிவான தொழில் என்று தாழ்வுபடுத்தியது போலல்லாமல் சமண சமயம் பயிர்த் தொழிலை மிகச் சிறந்த தொழில் என்று போற்றியது. பயிர்த் தொழில் செய்யும் வேளாளரும், வாணிபம் செய்யும் வணிகரும் ஏனைய தொழிலாளரும் இந்த மதத்தை மேற்கொண்டிருந்தனர்.

இவர்கள் சமணசமயத்தைச் சேர்ந்திருந்தபடியால் ஏனைய மக்களும் இச்சமயத்தை தழுவுவராயினர். சேர, சோழ, பாண்டிய, பல்லவ மன்னர்களில் பலர் சமண சமயத்தைச் சார்ந்திருந்தனர். இவர்களால் சமண சமயத்திற்கு ஆதரவும் செல்வாக்கும் ஏற்பட்டன.

இந்த சமயத்தின் செல்வாக்கைக் கண்டு, சமண சமயத்தவரல்லாத அரசரும் கூட சமணப் பள்ளிகளுக்கும் மடங்களுக்கும் நில புலன்களையும் பொன்னையும் பொருளையும் பள்ளிச் சந்தமாகக் கொடுத்து உதவினார்கள். இத்தகைய காரணங்களினாலே, சமண சமயம் தமிழ்நாட்டிலே வேரூன்றித் தழைத்துச் செழித்துப்பரவியது. என்று மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் எடுத்துரைக்கிறார். (வேங்கடசாமி.மயிலை சீனி.,1980)

மேலும், அக்காலத்தில் சமணத்தோடு பௌத்தமும் ஆட்சியாளர்களைக் கவர்ந்த சமயமாக விளங்கிற்று என்பதையும் வைதீக சமயம் பின்னடைந்திருந்தது என்பதையும் சுட்டி சமணம் மற்றும் பௌத்தம் பெற்றிருந்த சிறப்பைக் கூறுகின்றார் மயிலை சீனி வேங்கடசாமி.(வேங்கடசாமி.மயிலைசீனி.,1980)

பௌத்தத்தையும் சமணத்தையும் வணிக வர்க்கத்தினர் ஆதரித்ததையும் அவர்கள் தம்முடைய செல்வாக்கினால் நீதிபரிபாலனத்தில் தலையிடும் அளவுக்கு செல்வாக்கு பெற்றிருந்தனர் என்பதையும், சமணத்தையும் பௌத்தத்தையும் சிறப்பாக ஆதரித்தவர் அக்காலத் தமிழக வணிக வர்க்கத்தினர் என்பதையும் சமண, பௌத்தப் பள்ளிகள் பெரும் நிலவுடைமை நிறுவனங்களாகி செல்வாக்குப் பெற்றிருந்ததைப் பல்லவ அரசன் மகேந்திரவர்மன் எழுதிய அங்கத நாடக நூலாகிய மத்தவிலாச பிரசனம் என்னும் நூல் மூலம் அறியலாம் மேற்கண்ட விளக்கங்கள் வழி சமண பௌத்தர்களின் வணிக ஆதரவும் அவர்களுக்கு ஆட்சியாளர்களிடம் இருந்த செல்வாக்கும் தெரியவருகின்றது.

## அறநூல்களின் தோற்றம்

சங்ககால இறுதியில் இனக்குழு மரபுகள் அழிந்து வலுவான அரசுகள் தோன்ற ஆரம்பித்திருந்தன.. சங்க இலக்கியப் புறத்திணைப் பாடல்கள் இதற்கு தகுந்த சான்றுகளை வழங்குகின்றன. வெட்சித்திணை, வஞ்சித்திணை, உழிஞைத் திணை, தும்பைத் திணை என்று தொல்காப்பியம் இலக்கணம் வகுக்கும் அளவிற்கு தமிழ்ச் சமூகத்தில் போர்கள் மலிந்திருந்தன. இதனூடாகவே வணிக வர்க்கமும் வளர்ந்து சமூகத்தில் முதன்மை பெற ஆரம்பித்தது. இக்காலத்தில் அயல்நாட்டு வணிகத்தின் காரணமாக வணிகர்களின் செல்வச் செழிப்பு மிகுந்திருந்தது. தமிழ்ச் சமூகத்தில் நீண்ட காலமாகப் பல்வேறு குலங்களுக்குள்ளும் அரசர்களுக்குள்ளும் நடந்த இடைவிடாத போர்கள் அக்கால மக்களுக்கு ஒருவித மனச்சோர்வையும் விரக்தியையும் அளித்திருந்தன. கொலை, கொள்ளை, கள் குடித்தல், பரத்தையர் ஒழுக்கம் போன்ற செயல்கள் சமூகத்தில்; மிகுந்திருந்தன. இக்காலக்கட்டத்தில் சமயப் பிரச்சாரம் செய்ய வந்த சமண, பௌத்த சமயங்கள் இப்போக்கை வன்மையாகக் கண்டித்தன. சமூகத்தின் அனைத்துத் தரப்பினருக்கும் அரசன் முதல் குடிமக்கள் வரை அனைவருக்கும் புதிய கருத்துக்களையும், நீதியையும் போதித்தன. அறம், ஒழுக்கம் போன்ற பண்புகளைப் பிரச்சாரம்செய்தன.

இவ்வாறு தமிழகத்திற்கு வந்து பரவிய சமண, பௌத்த சமயங்கள், அறக் கருத்துக்களின் வழி சமூகம், அரசியல், பண்பாடு என்று அனைத்து தளங்களிலும் தங்கள் செல்வாக்கை ஏற்படுத்தின. சமண பௌத்தக் கொள்கைகளுக்கு வணிக வர்க்கத்தினரின் ஆதரவும் மன்னர்களின் ஆதரவும் கிடைத்தன. இவ்வாறு ஒரு காலத்தின் சமூக, பண்பாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்வதாக அறநூல்கள் தோற்றம் பெற்றன.

## முடிவுரை

**ஒரு இலக்கியப் படைப்பு தனிமனித அக உணர்வு எழுச்சியின் உந்துதலால் கற்பனையாக படைக்கப்பட்ட போதிலும் அவ்உணர்வு வெளிப்பாட்டிற்குக் கருவியாக இருப்பது அவன் வாழும் சமூகச் சூழலேயாகும். படைப்பாளன் அவன் வாழும் சமூகத்தின் ஓர் அங்கமாவான். அவன் படைக்கும் இலக்கியம் அச்சமூகத்தின் உற்பத்தி பொருளே ஆகும். எனவேதான் மனித வாழ்வை, அவன் கடந்து வந்த சமூக வரலாற்றை அறியும் ஆவணமாக இலக்கியங்கள் துணை செய்கின்றன. அந்த வகையில் அறஇலககியங்களின் தோற்றத்திற்கு அக்கால சமண பௌத்த தத்துவக்கருத்துக்களும் சமயப்பண்பாட்டுக் கொள்கைகளும், சமூக மாற்றங்களும் காரணங்களாக அமைந்திருப்பதைக் காணமுடிகிறது.**

## References


Ilangovadigal, (1872) Silapathikaram, Kalvi Vilakka Azhchukoodam, Chennai.

Kalachapathi K., (1966) Pandaittamizhar Vaazhvum Vazhipaadum, Pārinilaiyam, Chennai.

Saminathaiyar, U.Ve. (1956) Pathuppaatu Moolamum Uraiyum, Kalaga Publication, Chennai.

Venkatasami Mayilai Seeni, (1980) Samanamum Tamizhum, Kalaga Publication, Chennai.



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Author's has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2020. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License